1972 ஏப்ரல் 1]

திரு. கே. என். குமாரசாமி : பாரபின்னுக்கு மூலப் பொருள்கள் என்னென்ன என்பதை அரசு அறிவிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மெட்ராஸ் ரிபைனரியிலிருந்து கிடைக்கப்படும் சில பொருள்களை அடிப்படையாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. தென் இந்திய மாநிலங்களிலும், அஸ்ஸாமிலும் இது போன்ற தொழிற்சாலைகள் இருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் இதை உற்பத்தி செய்ய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். மெட்ருஸ் ரிபைனரியில் கிடைக்கக்கூடிய உபபொருள்களைக் கொண்டு இது உற்பத்தி செய்யப்படும்.

கைவினைப் பொருள்கள் விற்பனைச் சங்கம்

* 824 வினு.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு கைவினைப் பொருள்கள் விற்பனைச் சங்கத்தின் கிளை விற்பனை நிலையங்கள் தற்போது எத்தனை உள்ளன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எட்டு.

திரு. கே. எ. வகாப் : இந்த எட்டு இடங்களிலுள்ள கைவினைப் பொருள்கள் நிலையங்களில் டெல்லி, வேலூர் ஆகிய இடங்களைத் தவிர, மற்றவைகளெல்லாம் நஷ்டத்தில் நடைபெறுகின்றன என்பது உண்மையா? அதுமட்டுமல்ல. இவற்றிற்கான மூலதனத்திற்காகத் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஏறத்தாழ ரூ. 10 லட்சம் கடனைப் பெற்று இருப்பதால், அவைகள் அதைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கின்றன என்பது அரசுக்கு தெரியுமா? அதற்கு என்ன பரிகாரம் காணப் போகிறது இந்த அரசு?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிட்டத்தட்ட ஆறு எம்போரியங்களில் லாபம் என்ற கணக்கு இருக்கிறது. லாபத்தையெல்லாம் விழுங்குகின்ற முறையிலே தலைமை சொஸைடியாக விளங்குகின்ற அமைப்பிலே ரூ. 5,99,564 நஷ்டம் என்று இருக்கிறது. பொதுவாக இதை எப்படிச் சீர்படுத்துவது என்பதைப்பற்றி அரசாங்கம் பரிசிலித்து வருகிறது.

தீக்குச்சித் தொழிற்சாலைகள்

* 825 வினு.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தொழில் கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படும் தீக்குச்சி தொழிற்சாலைகள் எத்தனை?

(இ) அவை யாவை?

[1972 ஏப்ரல் 1

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஒன்பது.

(இ) நான்கு கூட்டுறவுத் தீக்குச்சி தொழிற்சாலைகள் திருநெல்வேலி மாவட்டத்திலும், மூன்று இராமநாதபுரம் மாவட்டத்திலும், ஒன்று தஞ்சை மாவட்டத்திலும், ஒன்று செங்கற்பட்டு மாவட்டத்திலும் உள்ளன.

திரு. கே. எ. வகாப் : இப்படிப்பட்ட தீப்பெட்டி தொழிற்சாலைகள் தற்பொழுது மார்க்கெட்டில் ரொம்ப சிரமப்படுகின்றன. அரசாங்கம் சில முயற்சிகள் எடுத்து தீக்குச்சிகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிற தீப்பெட்டிகளை வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் விற்பனை செய்வதற்கு உதவி செய்வதுதான் நோக்கம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்தத் தீப்பெட்டித் தொழில் பாண்டு ரோல் சிஸ்டம் எடுக்கப்பட்டால் கஷ்டப்படும். அதே கஷ்டத்தை கூட்டுறவு தீப்பெட்டி தொழிற்சாலைகளும் அனுபவிக்கின்றன. இதை எடுத்தாலும் நஷ்டத்தில்தான் போய் முடியும் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்த்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பாண்டு ரோல் சிஸ்டம் வேண்டும் என்று சொல்கிறார்கள். வேண்டாம் என்று சொல்லவில்லை. பாண்டு ரோல் சிஸ்டம் இல்லாத காரணத்தினால் கூட்டுறவுத் தொழிற் சாலை போன்ற நியாயமாக நடை பெறுகின்ற தொழிற்சாலைகள் வரியை ஏய்க்க முடியவில்லை. தனியார் ஸ்தாபனங்கள் வரியை ஏய்க்கின்றன. இந்த சிஸ்டம் வேண்டும் என்று கோரிக்கை வந்து, மாநில அரசு சிபார்சு செய்திருக்கிறது. பாண்டு ரோல் சிஸ்டம் வேண்டும் என்று கேட்கிறவர்கள் பெரிய முதலாளிகளாக இருக்கிறார்கள். அதனால்தான் மத்திய அரசு தயக்கம் காட்டுகிறது. ஏமாற்ற இப்படிச் செய்யலாம் என்பதைப்பற்றி சந்தேகம் வருகிற காரணத்தினால், மத்திய அரசு இதை மறுத்துவிட்டது.

திரு. கே. கந்தசாமி : தனியாரால் நடத்தப்படுகிற தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு அதிக லாபம் இருப்பதாகக் கூறப்படுகிறதே? அதைப்போல கூட்டுறவு முறையில் நடத்தப்படுகின்ற தொழிற்சாலைகளில் நல்ல லாபம் இருக்கிறதா? அப்படியானால் இன்னும் இவைகளை அதிகமாகத் துவங்க அரசு ஏதாவது முயற்சி செய்யுமா ?

1972 ஏப்ரல் 1]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கூட்டுறவுத் தொழிற்சாலைகள் வர வேண்டும் என்பது நம்முடைய கொள்கை. இலாபத்தை மட்டும் கருதாது, இலாபம் ஒருவருக்கு மட்டுமே போகாமல் பல பேர்களுக்குப் பங்கிடப்படுகிறது என்ற முறையில் கூட்டுறவுத் துறை நன்றாக நடைபெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. த. சோனையா : அமைச்சர் அவர்கள் ராமனாதபுரம் மாவட்டத்தில் மூன்று தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருப்பதாகச் சொன்னார்கள். அதில் கிழக்கு ராமனாதபுரத்தில் ஏதேனும் தொழிற்சாலை இருக்கிறதா? அப்படியில்லை என்றால், கிழக்கு ராமனாதபுரத்தில் தீப்பெட்டித் தொழிற்சாலை ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கிழக்கு ராமனாதபுரத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த உறுப்பினர் அவர்கள் முயற்சிப்பார்களேயானால், அரசாங்கம் உதவி செய்யும்.

பாய் நெய்பவர்களுக்கு இயந்திரங்கள்

*826 வினா.—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி மத்திய பாய் நெசவாளர் கோரை உற்பத்தியாளர் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஜப்பானிய பாய் நெய்யும் மிஷின்களை வாங்கி அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

அணைக்கரை—கொள்ளிடம் சாலை

*827 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பார்ரா—

அணைக்கரையிலிருந்து கொள்ளிடம் வரை உள்ள கரையை அகலப்படுத்தி, பஸ், லாரி போக்குவரத்துக்குப் பயன்படும்படி செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அணைக்கரையிலிருந்து கொள்ளிடத்திற்குத் தெற்குக் கரை வழியாகக் கொள்ளிடம் என்று அழைக்கப்படுகிற ஆணைக்காரன்சத்திரம் பாதையைச் செம்மைப்படுத்தித் தருவதன் மூலம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS